

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியகம் காப்பாட்சியர், சி.சிவகுமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

## நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

தஞ்சாவூர் ஆக.6-

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் போது உலகாண்ட சோழர்களின் பங்களிப்பை போற்றவும் அக்கால கலைப் பொருட்கள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்கவும் தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் அமைப்பதற்காக தஞ்சாவூர் பெரியகோயில் அருகேயுள்ள மேம்பாலம் அருகில் உள்ள இடத்தை மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே தேர்வு செய்து, துறைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்களிடம் காண்பித்துள்ளார். இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது என துறைச் செயலர் கூறியதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாநகரில் இவ்வளவு பெரிய இடம் கிடைத்திருப்பது அரிய வாய்ப்பாக இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் வீண் போகாத வகையில் சிறந்த அருங்காட்சியகத்துக்கு இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது.

தஞ்சாவூரில் சோழர்களின் பெருமையை பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டார். இந்திய வரலாற்றில் சோழர்களின் காலம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கடல் கடந்த வாணிபமும், போர்வெற்றியும் அவர்களின் ஆட்சிமுறையும் இந்தியாவில் இருந்த எத்தனையோ அரசாட்சிகள் நடந்திருந்தாலும், முதன்மையாக சோழர்களின் காலம் விளங்கியது. தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டிய மாமன்னன் இராசராச சோழன், கங்கைகொண்ட சோழபுரம் கட்டிய ராஜேந்திர சோழன் என பிற்காலச் சோழர்களின் பங்களிப்பு தமிழகத்தில் நிலை நாட்டிய பெருமை உண்டு. சோழர்களின் போர் வெற்றி,

கோவில் பணிகள்,சமுதாயப் பணிகள்,கலைத்திறன் என எல்லாவற்றையும் விளக்கக் கூடிய வகையில் அருங்காட்சியகம் அமைய உள்ளது.ஏற்கனவே 1000 ஆண்டு விழாவின்போது சோழர்களின் பெருமையை விளக்கும் விதமாக மிகப் பெரிய கண்காட்சி நடத்தப்பட்டது.

அது ஒரு குறிப்பிட்ட காலம் தான் நடைபெற்றது. தற்போது நிரந்தரமாக இந்த அருங்காட்சியகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைய உள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் பெரிய கோவில் அருகே அமைந்துள்ளதால் மிகவும் சிறப்பாக உள்ளது. பெரிய கோவிலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு எளிதாக அருங்காட்சியத்திற்கு வந்து பார்ப்பதற்கு சிறந்த இடமாக அமைந்துள்ளது. விரைவில் முதல்வரின் ஒப்புதலின் பேரில் கட்டுமான பணிகள் துவங்கப்படும். என்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை

அமைச்சர் தங்கம். தென்னரசு தெரிவித்தார்.

ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண். ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியம் காப்பாட்சியர், சி.சிவகுமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ரூ. 28 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய வகுப்பறை!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்

செஞ்சி, ஆக. 6-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழவந்தாங்கல் ஊராட்சியில்புதிய நாடக மேடை கட்டிடம் கட்டுவதற்கு துவக்க விழா மற்றும் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் அம்பிகா அய்யனார், ஒன்றிய கவுன்சிலர் கலைவாணி மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் கலைச்செல்வி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு செஞ்சிசட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டச் செய்து பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை பள்ளி மாணவ மாணவிகளை முன்னிலைப் படுத்தி அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தீவனூரில் நடைபெற்ற உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தில் வைக்கப் பட்டிருந்த கோரிக்கை மனுக்கள் பெட்டியில் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் கொடுத்த மனுக்கள் மீது முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சுமார் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடிகால் வாய்க்கால், சுற்றுப்புற சுவர், சுடுகாடு இடுகாடு மயான பாதை பணிகளை செய்வதற்கு உத்தர விட்டார்.

பொதுமக்கள் கொடுத்த மனுக்கள் மீது 30 நாட்களில் உடனடியாக நடவடிக்கை எடுத்த முதலமைச்சரை நாம் பெற்றிருப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் விஜய ராகவன், பச்சையப்பன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்சீத்தாலட்சுமி, வெங்கடசுப்பிரமணியன், ஒன்றிய பொறியாளர்கள் அருண் பிரசாத், சுப்பிரமணியன், அம்பிகா, சீதாராமன், மாவட்ட பிரதிநிதி திருநாவுக்கரசு,ஏரி நீர் பாசன சங்கத் தலைவர் திருமா வளவன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன்,ஒன்றிய கவுன்சிலர் சத்யா கார்த்திகேயன், வட்டார கல்வி அலுவலர் புருஷோத்தமன், வட்டார மேற்பார்வையாளர் கோவிந்தராஜ், மாவட்ட பிரதிநிதி அய்யா துரை, முன்னாள் கவுன்சிலர் ஏழுமலை, ஊராட்சி நிர்வாகிகள் சிங்காரவேல், அண்ணாதுரை, முருகன், பழனி, மலையரசன் குப்பம் மணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, SIHS காலனி , BRIDGE WOOD பள்ளி அருகில், கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் பகுதி1, 55 வது வட்ட கழக தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் மற்றும் பொதுமக்கள் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கழக கொள்கை விளக்க அணி துணைச் செயலாளர் கரூர் முரளி, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.

